REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 6உ புதன் (19—1—55) ★ ★ வெளியீடு: தை 7உ வியாழன் (20—1—55) [இதழ் 186

வேலையின்மையைக் குறைக்க...

ஸ்ரீநகர், ஜன. 17—

காஷ்மீர் அரசாங்கம் ரூ. 5 கோடி செலவில் நிறைவேற்ற விருக்கிற வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தில் குழி தோண்டும் இயந்திரங்களை ஆரம்ப வேலைகளுக்கு உபயோகிக்காமல் அந்த வேலையில், வேலையின்றி தவிக்கும் பலரை ஈடுபடுத்த நிச்சயித்திருப்பதாகத் தெரிகிறது. இப்போது அத்திட்டத்தில் 8,000 பேர் வேலை செய்கின்றனர். அந்த எண்ணிக்கை இப்பொழுதுள்ள முடிவுப்படி இரட்டிப்பாக உயர்த்தப்படும் என்று தெரிகிறது.

'உருக்குத் தொழிற்சாலை துவங்கப்படுமா இல்லையா?'

'வேலையின்மைக்கு ஏற்ற பரிகாரம் அதுதானே?'

'ஐந்து இடங்களில் பூமிக்கடியில் இரும்பு மங்கிக்கிடக்கிறதே?'

கோரிக்கையில் வெற்றி காண அறப்போர்

ஐதராபாத்தில் பூமிக்கடியில் ஐந்து இடங்களில் பண்படுத்தப்படாத இரும்பு தேங்கிக்கிடப்பதாக ஏற்கனவே விவரம் தரப்பட்டிருக்கிறது.

அந்த இரும்பைத் தோண்டி எடுத்துப் பண்படுத்துவதற்கு ஒரு உருக்குத் தொழிற்சாலையை உடனடியாகத் துவக்க வேண்டுமெனும் கோரிக்கை ஒன்று இந்தியப் பேரரசின் தொழிலாளர் மந்திரிக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

புதிய தொழிற்சாலை நிறுவப்படுவதின் காரணமாக நாட்டின் இரும்புத் தேவை பூர்த்தியாவதுடன், ஐதராபாத்தில் பரவிக் கிடக்கும் வேலையின்மையும் களைந்தெறிய வழி பிறக்கும் என, அக் கோரிக்கையில் விளக்கப்பட்டிருக்கிறது.

இக்கோரிக்கையைக் கொடுத்துள்ளவர்கள் அங்கு வேலையின்றி தவித்துவரும் பொதுமக்களாவர். அங்குள்ள வேலையற்றிருப்போர் ஒன்றுகூடி 'வேலையற்ற மக்கள் முன்னணி' என்ற பெயரில் ஒரு கட்சியைத் துவங்கியுள்ளனர். அகில இந்திய 'பூமனிஸ் கட்சி'தான் இம்முன்னணியைப் பெற்றெடுத்துள்ளது.

தன் கோரிக்கைக்குத் திருப்திகரமான பதில் இந்தியப் பேரரசினிடமிருந்து உடனடியாகக் கிடைக்கவில்லையானல், தீவிரமான அறப்போர் துவக்கப்படும் எனவும் அம் முன்னணி எச்சரித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. பொதுச்செயலாளர்

அண்ணுதுரை

சென்னை, ஜன. 19—

பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்களுக்கு, இன்று முதல் இம்மாதம் இறுதி வரையில் வேறு சில முக்கிய நிகழ்ச்சிக ளிருக்கிறபடியால், 20—1—55 முதல் 25-1-55 வரையில் ஒப்புதல் அளித்த நிகழ்ச்சிகட்குச் சென்று கலந்துகொள்ள முடியாமலிருக்கிருர்கள். ஒப்புதல் அளித்த நிகழ்ச்சிகட்கு, பிப்ரவரி மாதத்தில்தான் தேதி கொடுக்கப்படும்.

★★★★★★★★★★★★★★★★★

'பதவியைத் துறக்கிருயா?- உயிரை இழக்கிருயா?'

'இரண்டிலொன்றுக்கு உம்மைத் தயாரித்துக்கொள்'

பிரதம மந்திரிக்கு ஒரு ஆத்திரக்காரனின் மிரட்டல் கடிதம்

"பதவியை விட்டுத் தொலைய வேண்டும்; அல்லது பிற்போக்கான அரசியல் கட்சிகளை ஒழித்துவிட வேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை உடனடியாக மேற்கொள்ளத் தவறினல் உம்மைக் கொன்றுவிடுவேன்." இப்படி, ஒரு ஆத்திரக்காரன், ஜப்பான் பிரதமர் இஷிரோ ஆடோயாமாவை அச்சுறுத்திக் கடிதம் எழுதியுள்ளான்.

கடிதம் தீட்டியவன் இன்னுர்தான் என்பதை போலீசாரால் அறிந்துகொள்ள முடியவில்லை. இக்கடிதத்தின் எதிரொலியாக, பிரதமருக்கு இருந்துவரும் பாதுகாப்புப் படை பெருக்கப்படும் என போலீஸ் அதிகாரி குறிப்பிட்டார்.

இந்தி மொழியால் வடநாட்டவர் பெற்றுள்ள அனுகூலம்

தென்னுட்டவர் படும் தொல்லை

மைசூர் மந்திரி எடுத்துக் காட்டுகிருர்

பெங்களூர், ஜன. 18—

"தென்னுட்டு மக்களினும், வடநாட்டு மக்களுக்கு இந்தி மொழி விஷயத்தில் நிச்சயமாக அனுகூலம் இருக்கிறது என்பதை என்னல் கூருமலிருக்க முடியவில்லை; வடநாட்டவர்களுக்கு இந்தி மொழி நீண்ட காலமாகவே பழக்கமானதாகும்; ஆனல், தென்னுட்டவர் இந்தி மொழிப் பழக்கத்திற்காக இப்போது வெகு பிரயாசையுடன் கஷ்டப்பட வேண்டியுள்ளது."

—என்று, மைசூர் மாநில உள்நாட்டிலாகா அமைச்சர் திரு. எச். சித்தவீரப்பா அவர்கள் மைசூர் இந்தி சாகித்திய பரீக்ஷைத் பட்டமளிப்பு விழாவில் தலைமையுரை ஆற்றுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"மைசூர் மாநிலத்தில் கன்னடம் பிராந்திய மொழியாக இருக்கலாம்; ஆனல், மாநிலம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் வேறுபாடற்ற கூட்டான நோக்கு இருப்பதைக் காணமுடியும். மைசூர் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி முயற்சியில் குறுகிய மனப்பாங்கோ, தீவிரப் போக்கோ இருந்ததில்லை; இந்தக் கொள்கையே, மாநிலத்தில் இந்தி பரவுவதற்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

ரத்தாகிறது !

கர்னூல், ஜன. 18—

ஆந்திர மாநில பொருளாதார ஆலோசகர் அபிவிருத்திக் கமிஷனர் பதவி ரத்து செய்யப்பட்டுவிட்டது. இப்பதவியிலிருந்த பி. நடராசன் என்பவரும் தமது பதவியை இராஜிஞமா செய்துவிட்டார்.

பய முறுத்தலா ?

சைஞ சிறை வைத்திருக்கின்ற 11 அமெரிக்க விமானிகளையும் விடுவிக்க ஐ. நா. சபை தவறுமானல், அமெரிக்கா, டிப்பிரச்சினையை நேரடியாகக் கவனிக்க நேரிடும் என்று அமெரிக்க இராஜாங்க மந்திரி டல்லஸ் கூறியிருக்கிருர்.

"ஆங்கிலம் கட்டாய மொழியாக கற்பிக்கப்பட வேண்டும்"

மக்கள் சபைத் தலைவர் மாவ்லங்கர் கருத்து

அகமதாபாத், ஜன. 18—

"குழந்தைகளின் அறிவு வளர்ச்சி எல்லையை அதிகரிப்பதற்கு, பள்ளிகளில் ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்க வேண்டும்; ஆங்கில மொழியில் ஏராளமான அளவு இலக்கியப் பொக்கிஷம் உள்ளது; அத்தகைய ஆங்கிலத்தைப் படிப்பதால் மாணவர்களின் அறிவுத் தாகம் வளரும்,"

என்று மக்கள் சபைத் தலைவர் ஜி வி. மாவ்லங்கர் குறிப்பிட்டிருக்கிருர்.

இங்குள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் பேசிய அவர், மேலும், "பாடங்கள் எல்லாம் மாணவர்களுக்கு அவரவர்களது தாய் மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும்; தாய் மொழியில் போதிக்கப்படும் பாடத்தைத்தான் மாணவர்கள் எளிதில் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது," என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

'சிலருக்கே அனைத்தும் என்ற ஆதிக்கம் அழிய வேண்டும்'

'சமுதாய ஏற்றத்தாழ்வுகள் நீங்க வேண்டும்'

சென்னை முதலமைச்சர் காமராசர் பேசுகிருர்

சென்னை, ஜன. 18—

"சகல உரிமைகளையும் பெற்றுள்ள நிலையிலிருக்கும் ஒரு சிலர், அந்த நிலையிலேயே ஒட்டிக்கொண்டிருக்க விழைந்தால் நாட்டில் மோதுதல்கள் தவிர்க்க முடியாதனவாகிவிடும்; சமுதாய, பொருளாதாரத் துறைகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டாலன்றி நாட்டில் அமைதியும், பாதுகாப்பும் இருக்க முடியாது,"

—என்று, சென்னை முதலமைச்சர் காமராசர், க்ஷேமநல விஸ்தரிப்புத் திட்டங்களை அமுல் நடத்துவோர் மாநாட்டினை, சென்னை ராஜாஜி மண்டபத்தில் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"மக்களுடைய சமூக, பொருளாதார நிலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது கட்டாயமான ஒன்ருகும். பல நூற்ருண்டுகளாக ஏராளமான வகுப்பு மக்கள், அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிருர்கள்; நாம் சுதந்திரத்திற்காகப் போராடி அதிகாரம் பெற்றதே, அப்படி அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள நிலையிலிருக்கும் ஏராளமான மக்களின் நலன்களைப் பேணும் சந்தர்ப்பம் பெறுவதற்காகத்தான்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

ஜகார்தா, ஜன. 18—

வருகிற ஏப்ரலில் இங்கு நடைபெறவிருக்கின்ற ஆசிய—ஆப்பிரிக்கப் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள, இந்தோனேஷியப் பிரதமர் 25 நாட்டுப் பிரதமர்கட்கு அழைப்பு விடுத்துள்ளார்.

'சமூக அநீதிகள் அழிக்கப்பட சர்க்கார் உதவ முன்வர வேண்டும்'

'அரிசனங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள குடியிருப்புகளை ஒழிக்க வேண்டும்'

என். வி. காட்கில் கருத்துரை

"சமூக அநீதி, ஏற்றத் தாழ்வு, தீய சமூகப் பழக்கங்கள் இவற்றை ஒழிப்பதற்கான சமூக சீர்திருத்த இயக்கங்களில் அக்கறை காட்ட வேண்டியது சர்க்காரின் கடமையாகும். இந்தத் துறையில் முதல்படியாக, ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசன குடியிருப்புப் பகுதிகள் உடனடியாக ஒழிக்கப்பட வேண்டும். அத்தகைய நடவடிக்கை மக்களிடை சமூக ஒற்றுமை, சமத்துவம் என்ற உணர்வை உருவாக்கக்கூடும்,"

—இவ்வாறு, இந்திய அரசாங்க முன்னுள் மந்திரியான என். வி. காட்கில் என்ற மக்கள் சபை உறுப்பினர், பூஞ-ஜலகான் நகரில் நடைபெற்ற மராட்டிய சமுதாய மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"சர்க்கார் உத்தியோகங்களுக்கு ஆள் எடுக்கும்போது, தங்கள் சமூகத்தைவிட்டு பிறர் சமூகத்தில் திருமணம் செய்துகொண்டிருப்பவர்களுக்கு முதலிடம், சலுகை தர வேண்டும்.

"இவ்வாறு நாட்டில் உள்ள சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு சர்க்கார் ஆதரவு தரவும், உற்சாகமூட்டவும் முன்வர வேண்டும்.

"இந்தியாவின் லட்சியமெல்லாம் அரசியல், பொருளாதார, சமூக ஜனநாயகத்தை நாட்டில் நிலைபெறச் செய்வதேயாகும்."

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—1—1955 புதன்

அற்புதத்திலும் அற்புதம்

படித்த பரம்பரை—படிக்காத பரம்பரை என இரு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்க வேண்டிய நிலையில் மக்கள் இன்று இருக்கிறார்கள். எனவே, இப்பிரிவைக் களைந்தெறிந்து, மக்கள் அனைவரையும் கூடுமானவரை படித்த பரம்பரையினராக மாற்றியமைக்க முயல வேண்டியது, மக்கள் நலனில் அக்கரையுடைய ஒவ்வொருவரின் நீங்காக் கடமையாகும்.

இவ்வாறு கல்வித் துறையில் இரு பிரிவுகளாக மக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டிய நிலையில் நாடு இருக்கிறது என்ற உண்மையை சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், மிக விளக்கமாக தனது நாகபுரி பல்கலைக் கழக விரிவுரையில் ஒப்புக்கொண்டு இருக்கிறார். உண்மை நிலையை ஒப்புக்கொண்டுள்ளது மட்டுமன்றி, இதை மாற்றியமைக்கப் பயன் தரும் என்ற நினைப்பில் அல்லது மற்றவர்கள் அவ்வாறு நம்ப வேண்டும் என்ற நோக்கத்தில் அதற்கான வழிவகைகளையும் வகுத்துக் காட்டியுள்ளார். ஆனால் அவர், அவ்வாறு சிபாரிசு செய்துள்ள மருத்துவ முறையோ, இருந்துவரும் நோயை மேலும் கொடுமையுடையதாகவும், விரிவுடையதாகவும் செய்யத்தான் துணை செய்யுமே அல்லாது, மூலப் பிணியைப் போக்கக் காதொடிந்த ஊசியளவும் பயன்படப் போவது கிடையாது. இம்முடிவு அனுபவ உண்மையாகும்.

படித்த பரம்பரை—படிக்காத பரம்பரை என்ற இரு பிரிவுகள் எப்படி மக்களிடத்தில் முதல் முதலாகத் தோன்றலாயின என்பது கண்டறியப்பட்டால்தான் அப்பிரிவினையைக் களைய மேற்கொள்ளத் தகுந்த ஆற்றல் படைத்த மருத்துவ முறையைக் கண்டுபிடிப்பதும் சுலபமாகும்; வெற்றி கிட்டுவதும் உறுதியாகும்.

எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே உள்ள ஒரு மக்கள் கூட்டத்தில் கற்ற பரம்பரையும்—கற்காத பரம்பரையும் முதல் முதலாக எப்படி உருவெடுத்தன என்பதை ஆராய்வோம்.

அந்தக் காலத்தில் இயற்றப்பட்டு நடைமுறையில் புகுத்தப்பட்டிருந்த சமுதாயச் சட்டங்களில்தான், மேற்குறிப்பிட்ட தோற்றத்திற்கான உண்மைக் காரணங்களைத் தேடியாக வேண்டும்; அதுதான் முறையுமாகும்.

அன்று நடைமுறையில் இருந்துவந்த சமுதாயச் சட்டங்கள் எதை அறிவிக்கின்றன? ஒரு சமுதாயத்திலுள்ள மக்களுள் தனித்தனி நபர்களின் கல்வி பெறும் விழைவையும், கல்வி பெறும் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டு, கல்வி போதிக்கும் சமுதாயச் சட்டத்தை உருவாக்கவில்லை. கல்வி, ஒரு குறிப்பிட்ட குலத்தில் பிறந்த அனைவர்களுக்குமே தனி உடைமையாகும்; மற்றக் குலத்தில் பிறந்தவர்களுக்கு, அக்கல்வியில் எந்தவித உரிமையும் கிடையாது. குறிப்பிட்ட குலத்தினருக்குத்தான் கல்வி கைவல்லியமாகும்; மற்ற குடி பிறந்தவர்களுக்குக் கல்வி, முயன்றாலும் வரவே வராது. ஒரு வேளை வந்தாலும் கல்வியில் பாண்டித்தியம் பெற முடியாது—அதுவும் முடிவதானாலும்—கல்வி பெற நினைப்பதே மாபாபம்! இப்படி, கல்வித் துறையில் குலத்திற்குக் குலம் பேதப்படுத்தி வைக்கும் சமூகச் சட்டம் அக்காலத்தில் இயற்றப்பட்டு அமுல் நடத்தப்பட்டு வந்தது. இந்த அக்கிரம ஏற்பாட்டின் பயங்கர விளைவாகத்தான் 'கல்வி பெறத் தகு பரம்பரை—கல்வி பெறத் தகா பரம்பரை' என இரு பிரிவுகள் தோன்றி வளர்ந்து வரலாயின.

கல்வித் துறையைக் குறிப்பிட்ட ஒரே குலத்தின் தனி உடைமையாக, இயற்கைக்கு எதிராக ஏற்பாடு செய்து வைத்த அற நூலார், வேண்டுமென்றே இக்கொடுமையை மனமுவந்து இழைத்திருக்கிறார்கள். அக்கொடுமதியினரை, பொதுமக்கள் நலனில் அக்கரை உடையவர்கள் என்றோ, சமரச சமத்துவ நோக்குடையவர்களென்றோ எந்த நடுநிலை தவறாத ஆராய்ச்சியாளனும் ஒப்புக்கொள்ளான். அவர்களை, மனித குல விரோதிகள், சமரச சமத்துவப் பண்புகளின் ஜன்ம சத்துருக்கள் என்றுதான் ஒவ்வொருவரும் இழுத்துக்கூறுவர். நிற்க,

கல்வித் துறையைத் தனி உடைமையாக்கிய கயவர்களின் திருவிளையாடலின் விளைவாகத்தான் 'கல்வியில் முன்னேறியுள்ள குடும்பங்கள் — கல்வியில் பின் தங்கிக் கிடக்கும் குடும்பங்கள்' என இரு பிரிவுகளாக, மக்களைப் பாகுபடுத்திப் பார்க்க வேண்டிய அவல நிலை இன்றும் இருக்கிறது என்பது விளக்கமாகிறது.

குறிப்பிட்ட குலத்தவர்களின் தனிச் சொத்தாக இருந்துவந்த கல்வித் துறை, பொதுமக்களின் பொதுவுடைமையாக இன்று மெள்ள மாற்றப்பட்டு வருகிறது. அத்துறையைப் பொறுத்த வரையில் இன்றுள்ள சட்டங்கள் எதுவும், அக்காலத்துச் சட்டங்களைப் போன்ற தனி உடைமைச் சட்டங்களாக இல்லை. அந்தக் கால அக்கிரமச் சட்டங்கள் கால வேகத்தால் வெட்டி முறிக்கப்பட்டு, புதிய சமத்துவச் சட்டங்கள், அவ்விடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளன என்பதும் உண்மைதான். இருந்தாலும், சட்டங்களை மாற்றுவதும் புதிய சட்டங்களை உருவாக்குவதும் மிகமிகச் சுலபம். ஆனால், பழைய சட்டத்தால் உருவாகி வளர்ந்துள்ள ஒருவனின் மனப் பழக்கத்தை—நம்பிக்கையை- தாழ்வு -உயர்வு உணர்வை மாற்றிவிடுவது என்பது ஒரு நாளில் வெற்றி பெற்றுவிடுவது என்பது ஒருக்காலும் முடியக்கூடியது அல்ல. குறிப்பிட்ட ஒரு மனமாற்றத்தை வேரூன்றச் செய்வதற்கு ஒரு தலைமுறையல்ல — இரண்டு தலைமுறையல்ல—பல தலைமுறைகளும் தேவைப்படக்கூடும். 'கல்வி நமக்கு வராது—குறிப்பிட்ட குலத்தவர்கள்தான் அதற்கென பிறந்திருப்பவர்கள்—அவர்களுடன் நமக்கு எதற்குப் போட்டி?—பொறாமைப் பட்டால் போதுமா? விதியை மாற்ற நம்மால் ஆகுமா? ஆண்டவன் கிழித்த கோட்டை நாம் மீற நினைப்பதே மாபாபம் ஆயிற்றே? நமது பாட்டன் படித்தானா,தகப்பன் படித்தானா—நமக்கு மட்டும் எதற்குப் படிப்பு? நாம் படிக்கக்கூடாத குலத்தில் பிறந்தவர்கள்! காடு திருத்துவோம் — கழனியைக் கட்டிக் காப்போம் — விறகு பிளப்போம் — ஆடு மாடு மேய்ப்போம் - அவையே நமது பெருந் தொழில்' என அசைக்க முடியாத நம்பிக்கையில் ஊறி வந்த மக்களின் பிள்ளைகளை, டாக்டராக மாற்றுவதும், என்ஜினியர்களாக ஆக்குவதும், பேராசிரியர்களாக உருவாக்குவதும் உயர்தர அதிகாரிகளாக அரசாங்க அலுவலகங்களில் அமரும் உயர்நிலைக்கு உயர்த்துவதும், சாதாரணச் சம்பவங்கள் அல்ல. பாம்பின் வாய் சிக்கிய தேரை, மீண்டும் விடுபட்டு துள்ளிக் குதித்தோடும் உணர்வு பெறுவதில் எவ்வளவு அற்புதம் அடங்கி இருக்கிறதோ, அதைவிட ஆயிரம் மடங்கு அற்புதம் அடங்கி இருக்கிறது, படிப்புவராத இனம் படித்துப் பட்டம் பெற்று, படிப்புவரும் பரம்பரையை, ஒவ்வொரு துறையிலும் 'பீட்' அடித்து, புறமுதுகிடச் செய்திருக்கும்—செய்தவரும் அரும்பெரும் செயலில்! அற்புதத்திலும் அற்புதம் என்றுதான் இதைக் கூறவேண்டும்.

போலீஸ் குழுவை பெண்கள் சூழ்ந்து கொண்டனர்

கொள்ளைக்காரர்கள் தப்பி ஓடிவிட்டனர்

குவாலியர், ஜன. 18—

மத்தியபாரத் சர்க்கார், பிந்த் என்னும் கிராம மக்களின் மீது கொள்ளைக்காரர்கள் போலீசாரிடமிருந்து தப்பி ஓட உதவி செய்ததாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

பதினைந்து நாட்களுக்கு முன்னர் இப்பகுதியில் கொள்ளைக் கூட்டம் ஒன்று எட்டு போலீசாரை சுட்டுக் கொன்றனர். அக்கொள்ளைக் கூட்டத்தினரை போலீசார் வளைத்துப் பிடித்தனர். போலீசார் காவலில் உள்ள கொள்ளைக் கூட்டத்தினரை தப்பி ஓடுமாறு கிராம மக்கள் செய்துவிட்டனராம். போலீசாரை பெண்கள் கூட்டம் சுற்றிக் கொண்டதாம். இதன் மூலம் போலீசார் பலவீனப்படுத்தப் பட்டதால் கொள்ளைக்காரர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இச்செய்கை பற்றிப் பேசுகையில், மாவட்ட நீதிபதி போலீசார் சுடுவதைத் தொடர்ந்திருந்தால் குற்றவாளிகள் என்று பிரகடனம் செய்யப்படாத மக்கள் பலர் இறந்து போயிருப்பர் என்று கூறினர்.

இப்பகுதிகளில் கொள்ளைக் கூட்டத்தினரின் அட்டகாசம் ஏராளமாக இருப்பதால் சர்க்கார் இவர்களை ஒடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

நகரா சிலவாளி எனுமிடத்தில் அக்டோபர் 11-ல் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏழு பேர் மாண்டனர்.

குறைந்த செலவில் - அவசரத்தில் வழங்கப்படும் நீதி....!

சட்டத்திற்கும், மனித உரிமைக்கும் சாவுமணி அடிப்பதாகும்!

மக்கள் நீதிமன்றங்கள் பற்றி துணைவேந்தர் ஏ. இராமசாமி முதலியார் கருத்து

'குறைந்த செலவில் நீதி கிடைக்க வேண்டுமென்பதும், குறுகிய காலத்தில் நீதிகிடைக்க வேண்டுமென்பதும் மனித உரிமைகளை மதிப்பதாகாது; அதனால் சட்டமும், நீதியும் புறக்கணிக்கப் பட்டுவிடும்,''

—என்று, திருவாங்கூர் பல்கலைக் கழக துணைவேந்தர் ஏ. ராமசாமி முதலியார் ஆந்திர உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

" குறுகிய காலத்தில் நீதி வழங்கப்பட வேண்டுமென்று சொல்லப் படுகிறது; இது, புத்தகத்திலிருந்து 'காப்பி' அடிக்கப்படும் கொள்கையாகும்; பொறுப்புள்ள வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள், சட்டம், நீதி பற்றிய கொள்கைகளில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்,'' என்று அவர் எடுத்துக் கூறிவிட்டு, குறுகியகால நீதிமுறை பற்றி பேசப்படுவதை எதிர்த்தார்.

தன்னைப் போன்று பழைய காலத்தைச் சேர்ந்தவர்கள்தான் இப்பிரச்சினையின் தகுதி பற்றிப் பார்க்க முடிகிறது என்றும், தற்போதைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள், பிரச்சினையை நேருக்கு நேர் பார்க்கவில்லை என்றும் அவர் எடுத்துக் காட்டினார்.

" சட்டத்தினால் ஏற்படுகிற கால தாமதத்தை போக்குவது எப்படி?'' என்று கேட்கப்படுவது குறித்து அவர் பேசுகையில், தான், பல நாடுகளில், குறுகிய காலத்தில் நீதி வழங்கப்படுவதைக் கண்டிருப்பதாகவும், குறைந்த செலவு, அவசரம் இவைகளுடன் அந்த நாடுகளில் அளிக்கப்படும் நீதி, சட்ட விதிகளுக்கு மாறுபட்டதாகவும், நீதி, மனிதனின் அடிப்படை உரிமைகள் இவைகள் இல்லாது காணப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

" இந்த நாட்டிலுமா மக்கள் நீதி மன்றங்கள் அமைக்கப்படவிருக்கின்றன?'' என்று அவர் கேட்டார்.

" மக்கள் நீதி மன்றங்களில், சட்டப் பயிற்சி பெற்றவர்கள் நீதிபதிகளாக இருக்கக்கூடாது,'' என்று இருக்கிறது.

" மக்களிடையேயுள்ள சாதாரண பொது அறிவைக்கொண்டே வழக்குகளில் தீர்ப்புச் சொல்ல வேண்டும்,'' என்றிருக்கிறது.

" இப்படி, மக்கள் நீதி மன்றங்கள் இயங்கினால், அதன் மூலம் கணக்கிட முடியாத அளவில் லட்சக்கணக்கான மக்களுக்கு அநீதி இழைப்பதாகவே முடியும். அதுவும், வயது வந்தோர் அடிப்படையில் (மக்கள் நீதி மன்றம்) ஏற்படுத்தப்படும் என்றால், அதன் மூலம் சட்டத்தின் நிலை என்னவென்பதை யாருமே சொல்ல முடியாது எனலாம்'' என்று அவர் குறிப்பிட்டார்.

" இப்பிரச்சினை பற்றி வழக்கறிஞர்கள் நன்றாக ஆராயவேண்டும்; அவர்கள், வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள் என்பதால் அல்ல—பொதுமக்களுக்கு அவர்கள் கடமையாற்ற வேண்டியிருப்பது பற்றியே அவர்கள், இப்பிரச்சினை பற்றி ஆராய வேண்டும்; உண்மைக்குப் புறம்பாக இப்பிரச்சினையை அணுகுவது கூடாது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்,'' என்றார்.

" ஆராய்ச்சி, தேர்வு, கல்வி, தூண்டுதல் ஆகிய பிரச்சினைகளில், வழக்கறிஞர் தொழிலில் உள்ளோர், அவர்களுடைய தலைவர்களுக்கு வழிகாட்டலாம்'' என்று அவர் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், சட்டத்தை விளக்கிச் சொல்வதுடன் மட்டுமின்றி, சட்டம் எப்படிச் செயலாற்றப்பட வேண்டும் என்பதுபற்றி குறிப்பிடுகையில், சமூகத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு நீதி வழங்குவதற்காக, மற்றொரு பிரிவினருக்கு அநீதி வழங்கக்கூடாது என்று எடுத்துக் காட்டினர்.

" வழக்கறிஞர்கள், பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் மசோதாக்களைப் பற்றிய கருத்துக்களை அவ்வப்போது தெரிவிக்க வேண்டும்'' என்று அவர் இறுதியாகக் கேட்டுக் கொண்டார்.

குறிப்பு :—'மக்கள் நீதி மன்றம்' என்பது, கம்யூனிஸ்டு நாடுகளில் காணப்படும் நீதி மன்றங்களாகும்.

ஒழுக்கம் தந்த உயர்வு

ஐதராபாத் அரசாங்க பஸ் போக்குவரத்து இலாகாவில் பணிபுரியும் 'பஸ் கண்டக்டர்' ஒருவருக்கு, மாநில சர்க்கார், அவரது நாணயத்திற்கு ரூ. 10 பரிசு வழங்கியிருக்கிறார்கள்.

டி. நாராயணன் என்ற அந்த கண்டக்டர், ஒருநாள், அலுவலகத்தில் தனது அன்றாட வசூலை கட்டுகையில் தன் பையினுள் ஒரு தங்க நாணயம் இருப்பதைக் கண்டார். அதை அலுவலகத்தில் கொடுத்து, யார் அதை தன்னிடம் தந்தார்கள் என்பது தெரியவில்லை என்று கூறினாராம்

பின்னர் ஒரு பள்ளி மாணவியின் பெற்றோர், தங்கள் பெண் தான், பஸ்ஸில் பிரயாணம் செய்கையில் ஒரு அணா டிக்கெட் வாங்கிக்கொண்டு, ஒரு அணா தருவதற்குப் பதிலாக அந்த தங்க நாணயத்தைத் தந்துவிட்டதாகக் கூறி, அந்த நாணயத்தைப் பெற்றுக் கொண்டனராம்.

பின்னர் கண்டக்டரின் நாணயமான நடத்தைக்காக மாநில போக்குவரத்து 'இலாகா மந்திரியான திரு. திகம்பர் ராவ்பிந்து ரூ. 10 பரிசு வழங்கினார் எனத் தெரிகிறது.

ஐதராபாத் ஜாகிர்தார்கள்

ரூ. 3 கோடி நஷ்டஈடு பெற்றனர்

ஐதராபாத் ஜாகிர்தார் கட்டுப்பாடு சட்டப்படி இதுவரை ஜாகிர்தார்களுக்கு ரூ. 3 கோடி நஷ்டஈடு கொடுக்கப்பட்டதாம்.

இச்சட்டப்படி ஜாகிர்தார்களுக்கு கொடுக்க வேண்டிய நஷ்டஈடு மொத்தம் ரூ. 15.18 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

சென்ற மார்ச் திங்கள் வரை, சர்க்கார், 604 கட்டிடங்களை தங்கள் வசமாக்கிக்கொண்டிருக்கிறதாம்.

ஜாகிர்தார்களுக்கு நஷ்டஈடு கொடுக்கக் கணக்கிடும்பொழுது, கடந்த 10 ஆண்டுகளின் வருமானம் தெரியவில்லை என்றால், 'ஜாகிர்தார் கலேஜ்செங்' வரியின்படி நஷ்டஈடு கணக்கிடப்படுகிறதாம்.

1953—54-ம் ஆண்டில், கல்கத்தா துறைமுகம் வழியாக நடைபெற்ற சரக்குகள் போக்குவரத்தின் மொத்த அளவு சுமார் 90 லட்சம் டன் ஆகும்.

‘பிரதமரால் நியமிக்கப்பட்டவரே தேபர்!’

‘எனவே, காங்கிரஸ் கட்சியில் பெரும் மாறுதலுக்கு இடமில்லை!’

காங்கிரசிலுள்ள இரட்டையாட்சி முறையை அனுமந்தையா சாடுகிறார்

“அகில இந்திய காங்கிரஸ் தலைவராக தேபார் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதினாலேயே காங்கிரஸ் கட்சியில் மாறுதல்கள் எற்பட்டுவிட்டதெனக் கொள்ள முடியாது; ஏனெனில், தேபர், பிரதமர் பண்டித நேருவின் நியமனப் பிரதிநிதி ஆவார்.”

—இவ்வாறு, மைசூர் மாநில முதன்மந்திரி அனுமந்தையா குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூர் மாநில சட்டசபைகளின் சர்க்கார் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் பேசிய அவர், மேலும், “எல்லா மாநிலங்களிலும் கட்சி நிர்வாகத்திற்கும், அரசாங்கத்திற்குமிடையே தகராறுகள் இருப்பதற்கு காங்கிரஸ் கட்சியின் சட்டதிட்டங்களே காரணமாகும்,” என்றும் குற்றஞ்சாட்டினார்.

கடந்த காலத்தில், நாட்டின் தலைவர்கள், மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் கீழ் அமுலுக்கு வந்த இரட்டையாட்சி முறையைக் கண்டித்து வந்தனர்; ஆனால், இப்போது காங்கிரசில் இரண்டு பிரிவுகள், இரண்டு தலைவர்கள் என்ற நடைமுறை இருப்பது, இரட்டையாட்சி நடைமுறையாகவே உள்ளது. காங்கிரஸ் மேலிடம், கட்சியின் நிர்வாக இடங்களுக்கு மந்திரிகள் போட்டியிடக் கூடாதெனக் கோரி அனுப்பும் உத்தரவுகள், காங்கிரஸ் சட்டதிட்டத்திற்கு முரண்பாடுடையதாயுள்ளது” என்று அவர் குறிப்பிட்டார்.

“பண்டித நேரு பிரதமராயிருப்பது மட்டுமின்றி, காங்கிரஸ் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்ட பின், முன்பைக் காட்டிலும் அதிக திறனுடனும், செளகரியமாகவும் மக்கள் சபை காரியங்களைக் கவனித்து வந்திருக்கிறார்; இதற்குக் காரணம், பண்டித நேருவின் தனிக்குண விசேடம்தான் என்று முழுவதும் கூறிவிட முடியாது; காங்கிரஸ் நிறுவனம், அவருக்கு, தன் காரியங்களை திறம்பட நடத்த நிறைய வாய்ப்பளித்ததும்கூட அதற்குக் காரணமாகும்,” என்றும் அனுமந்தையா குறிப்பிட்டிருக்கிறார்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய சத்தியநாராயண சின்ஹா என்ற மக்கள் சபைக் காங்கிரஸ் கட்சிக் கொரடா பேசுகையில், மக்கள் உரிமையைப் போலவே எல்லா அரசாங்கக் கட்சி கொரடாக்களும், மாநில சட்டசபைகளில் நடந்துகொள்ள வேண்டும் என்றும், கட்சிக் கொரடா என்ற தங்கள் பெயருக்குச் சரியான இந்தி சொல்லான ‘சசேடக்’ என்ற சொல்லால் தங்களை அழைத்துக் கொள்வர் என்றும் குறிப்பிட்டார்.

“கட்சிக் கொரடாக்கள், இன்னும் பரவலான, முற்போக்கான, ஆக்கம் மிகுந்த பணிகள் புரிய வேண்டும்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோவை தொழிலாளர் கவனத்திற்கு!

சென்னை, ஜன. 18—

தொழிலாளருக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை, ஜனவரி 26-ந் தேதியன்று, கோயம்புத்தூரில், மத்திய தொழிலாளர் நல மந்திரி ஆரம்பித்து வைப்பார்.

இத்திட்டம், பல மாநிலங்களில் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களில் சுமார் ஆறு லட்சம் பேர், இத்திட்டத்தின்கீழ், பல்வேறு பயன்களை இப்போது பெற்று வருகின்றனர்.

கோயம்புத்தூருக்கும், அதன் சுற்றுப்புறங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்போது, 100-தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் சுமார், 40,000 தொழிலாளர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள்.

‘மாநில புனரமைப்புக் குழு பாதகமாக தீர்ப்பளித்தாலும் போராடுவோம்!’

‘மொழிவழி பிரிவினை கோருவது தேசீய விரோதமானதல்ல!’

ஐக்கிய மகாராஷ்டிர மாநில கிளர்ச்சி இறுதிவரை நடைபெறும்

பம்பாய், ஜன. 18—

“பசல் அலி குழுவினர், ஐக்கிய மகாராஷ்டிரம் அமைக்குமாறு சிபார்சு செய்யவில்லை என்றாலும், ஐக்கிய மகாராஷ்டிரம் அமைப்பதற்கு காங்கிரஸ் தலைமைப்பீடம் ஒப்புக்கொள்ளும் வரையில் தொடர்ந்து போராட்டம் நடைபெறும்,”

என்று, பம்பாய் மாநில ரெவின்யூ அமைச்சர் பி.எஸ். ஹிரே, முலுந் என்னுமிடத்தில் ‘மகாராஷ்டிர பவனம்’ என்ற பொதுக் கட்டிடம் ஒன்றுக்கு அமைப்புக்கல் நாட்டுகையில் தெரிவித்தார். இக்கட்டிடம் சமூக சேவைக்காகப் பயன்படுத்தப்படும் என்று தெரிகிறது.

“மொழிவாரி மாநிலப் பிரிவினையை எதிர்ப்போரின் எண்ணிக்கை குறைந்து வருவது கண்டு தான் மகிழ்ச்சியடைவதாக ஹிரே மேலும் கூறினார்.

ஆனால், மொழிவழி பிரிவினையை எதிர்ப்போர், பிரிவினைக்கான கிளர்ச்சியை, ‘தேசீய விரோதமானது’ என்றும், ‘நாட்டைப் பிளப்பதாகும்’ என்றும் தவறாகப் பிரசாரம் செய்வது கண்டு அவர் வருத்தம் தெரிவித்தார்.

குஜராத்தி மொழி பேசுவோரும், கன்னட மொழி பேசுவோரும் தனி மாநிலங்களைப் பெற்றிருப்பதைக் குறிப்பிட்டு அவர் பேசுகையில், தங்களுக்கென்று தனியாக மாநிலம் ஒன்று இல்லாத துர்ப்பாக்கியசாலிகள் மகாராஷ்டிர மண்ணில் பிறந்த மக்களே,” என்றார்.

ஐக்கிய மகாராஷ்டிரம் என்று கோருகையில் தாங்கள் மற்ற மொழிவாரி கோரிக்கையை ஆதரித்து வந்திருப்பதாக அவர் கூறினார்.

“இந்தி மொழி பேசப்படும் பகுதிகள், பெரும்பான்மையாக இந்தி மொழி பேசும் பிரதேசங்களுடன் இணைக்கப்பட வேண்டும்,” என்று அவர் கூறினார்.

“ஐக்கிய மகாராஷ்டிரத்திற்கான தங்கள் கிளர்ச்சி கட்டுப்பாடுடன் நடத்தப்படும்,” என்று அவர் குறிப்பிட்டார்.

“நாங்கள் எங்களுடைய உணவைக் கேட்கிறோம்; வேறு யாருக்கும் சொந்தமானதைக் கேட்கவில்லை. அதற்கு மாறாக, உணவே இல்லாதவர்களுக்கு உணவு கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோம்,” என்று அவர் மேலும் கூறினார்.

திருமணத்திற்கு ஆடம்பர செலவு ஏன்?

அமெரிக்கப் பேராசிரியர் வியப்பு

பெரோஜ்பூர், ஜன. 18—

இந்தியாவில் திருமணங்களின் போது ஏராளமான பணம் வீணாக்கப்படுவது குறித்து அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார்.

பஞ்சாப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தருகிற அவர் கல்லூரிக் கூட்டமொன்றில் பேசுகையில், அமெரிக்கர்கள் ஆடம்பரப் பிரியர்கள் என்று பொதுவாக நிலவும் கருத்தை மறுத்துக் கூறினார்.

அமெரிக்காவில், சராசரி மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கைக்காகக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

அவர் தனது திருமணத்திற்கு ரூ. 25 மட்டுமே செலவாயிற்று என்றும், எட்டு நிமிடங்களில் திருமணம் முடிந்தது என்றும் கூறினார்.

அதிகமான மீன்

உண்போர் மலையாளிகளே!

இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறெவரைக் காட்டிலும் மலையாளிகள்தான் அதிகமான மீன் உண்கின்றனர். ஒரு சாதாரண நிலையிலிருக்கும் மலையாளி ஆண்டிற்கு 21 ராத்தல் மீன் உண்கிறார்; அதாவது ஒரு நாளைக்கு ஒரு அவுன்ஸ் மீன் சாப்பிடுகிறார்.

இந்தியாவில், ஒரு ஆண்டில், சுமார் 10 லட்சம் டன் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மதிப்பு சுமார் ரூபாய் 10 கோடியாகும்.

மீன் சமைக்கும் விஷயத்தில் வங்காளிகளுக்குக் கவர்ச்சியும் ஆவலும் இருந்தபோதிலும், மலையாளிகளே இதர சமூகத்தவரினும் அதிக மீன் உட்கொள்ளுகின்றனர்.

இத்தகவலை மத்திய அரசாங்க உணவு விவசாய இலாகா அதிகாரி ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

மீனில் புரதப் பொருளான நல்ல ‘வைடமின்’களும் இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே.

அவர் நம்பிக்கை

“ஒவ்வொரு இயந்திரத்தையும் நான் ஒரு கலைப் பொருளாகவே கருதுகிறேன்; நான், இயந்திரங்களில் நம்பிக்கை உள்ளவன்; உலக நாடுகளுக்குச் சமமாக இந்தியா வாழ வேண்டுமானால், இயந்திரங்களின் மீது எவ்வித வெறுப்பும் கொள்ளக் கூடாது; ஒவ்வொரு குடும்பத்திலும் இயந்திரங்கள் உபயோகிக்கப்படுவதைக் காண நான் மிக விரும்புகிறேன்.”

இவ்வாறு, பெரம்பூர் இரயில்வே வண்டிகள் தொழிற்சாலை அதிகாரிகளும் ஊழியர்களும் அடங்கிய கூட்டமொன்றில் பேசுகையில், இந்திய சர்க்கார் நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக் குறிப்பிட்டார்.

1953—54-ல் இந்தியாவிலிருந்து சுமார் ரூ. 10,59,000 பெறுமானமுள்ள விளையாட்டுச் சாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

கழகச் செய்திகள்

செங்காட்டுபட்டி தி. மு. க.

9—1—55 இரவு 7-30 மணியளவில், திருச்சி மாவட்டம் செங்காட்டுப்பட்டி தி. மு. கழகச் செயற்குழு கூட்டம் மோகன விலாஸ் ரைஸ் மில்லில், தோழர் வி. அருணாசலம் தலைமையில் நடைபெற்றபோது, 11—12—54ல் நடந்த கழகத் துவக்க விழா பொதுக்கூட்ட வரவு-செலவும், செயற்குழு உறுப்பினர் ரெ. துரைசாமி ராஜினாமாவும் அங்கீகரிக்கப்பட்டது.

மூணார் தி. மு. கழகக் கிளை

5—1—55 இரவு 7 மணிக்கு கழக ஆய்வுக்குழு கூட்டம் கழகக் காரியாலயத்தில் தோழர் எம். பி. ஜான் தலைமையில் நடைபெற்றபோது, புத்தாண்டிற்குக் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ஜே. டேவிட், துணைச் செயலாளர்: எம். பி. ஜான்; பொருளாளர்: கே. எஸ். சிதம்பரம். பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பழனி தி. மு. க. கிளை

15—1—55 இரவு 9 மணியளவில், தோழர் பி. எஸ். ஷேக் தலைமையில் நடைபெற்ற புதிய நிர்வாகிகள் தேர்தலில் ஆர். எஸ். மணி செயலாளராகவும், கா. வெங்கடசலம் துணைச் செயலாளராகவும், பி. பெருமாள் பொருளாளராகவும், பி. எஸ் ஷேக், சி. காளிமுத்து, மாவட்டப் பிரதிநிதிகளாகவும், வெ. தியாகராசன் பொதுக்குழு உறுப்பினராகவும், மா மாணிக்கம், கே. கருப்புச்சாமி, ந. கன்னையா, மா. ஆ. சேஷயன், எல். என். காட்டருயன், ப. குமார், கருப்பண்ணன், ஓ. முத்துசாமி, சி. பச்சை, என். கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொங்கல் விழாவை முன்னிட்டு விழா கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தோழர்கள்: கா. வெங்கடாசலம், பொதுச்செயலாளர் அண்ணாவின் மைத்துனர் அரங்காநாதன், கே. ஆர். ராமசாமி தாயார் ஆகியோரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஆலங்கோட்டையில் பொதுக் கூட்டம்

6—1—55ல், இவ்வூர் தி. மு. கிளைக் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தோழர் ஈ. வெ. கி. சம்பத், தற்கால அரசியல் நிலை, நாடகத் தடைச் சட்டம் பற்றி நீண்டதோர் உரையாற்றினார்.

கைத்தறித் துணி விற்பனை

★

சிறுமதுரை:

14—1—55ல், தோழர் டி.என். ஜி. அண்ணாமலை தலைமையில் தி. மு. கழகத் தோழர்கள் தி. மு. க. கொடியுடன் ஊர்வலம் வந்து கொடியேற்று விழாவாற்றினர்.

நாச்சியார்கோவில்

13—1—55 காலை 11 மணியளவில் தி. மு. கழகத் தோழர்கள் கைத்தறித் துணிகளை விற்பனை செய்தனர். மொத்தம் ரூ. 69-13-6-க்கு விற்பனையாகியது.

கோவை

6—1—55 முதல் 13—1—55 வரை கோவை மண்டபத்தில், கோவை நகர தி. மு. கழகத் தோழர்கள் ரூ. 8,000-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்.

காங்கயம்

14—1—55-ல், தி. மு. கழகத் தோழர்கள் கைத்தறித் துணிகளை சுமார் ரூ. 200-க்குமேல் விற்பனை செய்தனர்.

கும்மிடிபூண்டி

9—1—55 பிற்பகல் 2 மணியளவில், தி. மு. கழகத் தோழர்கள் தெருத் தெருவாகச் சென்று ரூ. 149—12—0-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்.

13—1—55 காலை 10 மணிக்கு தோழர்கள் யாவரும் புறப்பட்டு, எளாவூர், ஒபுலாபுரம், வேற்காடு, கவரைப்பேட்டை போன்ற ஊர்களுக்குச் சென்று, ரூ 109-13-0-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்.

பெருந்துறை

13—1—55 காலை 10 மணியளவில், தி. மு. கழகத் தோழர்கள் வீதி வீதியாகச் சென்று கைத்தறித் துணி விற்பனை செய்தனர். மொத்த விற்பனைத் தொகை ரூ. 191—1—3.

கடையநல்லூர்

11—1—55-ல், நகர தி. மு. கழகத் தோழர்கள் வீதிதோறும் சென்று ரூ. 201-5-6-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்.

அம்மையப்பன்

12, 13, 14—1—55 முடிய மூன்று தினங்களிலும், இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள், ரூ. 335-15-3-க்கு கைத்தறித் துணிகளை தோளில்சுமந்து வீதிதோறும் விற்பனை செய்தனர்.

நாகை வட்டம்

7—1—55 முதல் 13—1—55 வரை, கீழ்க்கண்ட ஊர்களில் நாகை வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர்கள் கைத்தறித் துணி விற்பனை செய்த விபரம்:— நாகப்பட்டினம்: ரூ. 500—0—0; திருவாரூர்: ரூ. 815—12—6; வெங்கிடங்கால்: ரூ. 485—5—3; மேலவாழக்கரை: ரூ. 461-3-10; சிக்கல்: ரூ. 285—0—0; கோகூர்: ரூ. 195—14—7; உத்தமசோழபுரம்: ரூ. 99—14—5.

மதுரை நகருக்கு குடிநீர் வசதி

கடன் எழுப்ப நகரசபை தீர்மானம்

மதுரை, ஜன. 12—

மதுரை நகர் முழுமைக்கும் குடிதண்ணீர் வினியோக ஏற்பாடுகளைச் செய்வதற்காக, 1955—56-ம் ஆண்டிற்கான நகரசபை வரவு—செலவு கணக்கில் (பட்ஜெட்) மாநில சர்க்காரிடமிருந்தோ அல்லது மற்றெந்த நிறுவனங்களிடமிருந்தோ அல்லது மக்களிடமிருந்தோ ரூ. 10 லட்சம் கடன் எழுப்புவது என்று மதுரை நகரசபை உத்தேசித்திருக்கிறது.

தற்போது மதுரை நகரின் சில குறிப்பிட்ட பகுதிகளில்தான் தண்ணீர் வினியோகம் முறையான நிலையில் இருந்து வருகிறது.

மேலும், நகரசபை வரவு-செலவு கணக்குகளில், சாலை பராமரிப்புகளுக்கென மேலும் 3 லட்சத்துக்கு அதிகம் ஒதுக்குவதென்றும், மேற்கொண்டு 5 இடைத்தரக் கல்வி நிறுவனங்கள் (மிடில் ஸ்கூல்) அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன.

1955—56-ம் ஆண்டிற்கான வரவு—செலவு கணக்குகளில், மொத்த வரவு ரூ. 60,66,000 என்றும், மொத்தச் செலவு ரூ. 56,00,000 என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

படையெடுப்புக்கு அறிகுறியா?

அமெரிக்க ஜனாதிபதி ஆலோசனை செய்கிறார்

செஞ்சீனப் பிரதேசத்திற்கு 20 கல் தொலைவிலும், சியாங்-கே-ஷேக்கின் தேசிய சீன சர்க்காரின் பார்மோசா தீவுக்கு வடக்கே 200 கல் தொலைவிலும் இருக்கின்ற டாச்சென் கோஷ்டித் தீவுகளில் ஒன்றான சிக்கியாங்ஷான் எனும் தீவை செஞ்சீனப் படைகள் தாக்கி விடுவித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

தாங்கள் தாக்கப்படுகின்ற நேரத்தில் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்காக அண்மையில் செய்து கொள்ளப்பட்ட அமெரிக்க—தேசிய சீன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இந்த டாச்சென் கோஷ்டித் தீவுகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லையாம்.

சிக்கியாங்ஷான் தீவை 20 போர்க் கப்பல்கள், 70 துருப்புக் கப்பல்கள் வளைத்துக்கொண்டு, தீவிற்குள் போகும் சப்ளை போக்குவரத்துக்கள் ஆகியவற்றைத் துண்டித்துவிட்டன என்று கூறப்படுகிறது.

18-ந் தேதி காலை 8 மணியளவுக்கு செஞ்சீனாவின் போர்ப்படை விமானங்கள் சிக்கியாங்ஷான், டாச்சென் கோஷ்டித் தீவுகள் மீது குண்டுமாரி பொழிந்ததாகவும், செஞ்சீனக் கடற்படை, சிக்கியாங்ஷானில் உள்ள தேசிய சீன இலக்குகள் மீது பீரங்கிப் பிரயோகம் செய்ததாகவும், விமான, கடற்படை தாக்குதல்களுடன் செஞ்சீனத் துருப்புகள் இக்கியாங்ஷானில் கரை இறங்கியதாகவும் செய்திகள் அறிவித்துள்ளன.

இத்தத் தீவைக்கைப்பற்ற செஞ்சீனப் படையினருக்கு இரண்டே மணி நேரம்தான் ஆயிற்றும். இப்போது சிக்கியாங்ஷான் தீவு முழுமையும் செஞ்சீனப் படையினரிடம் சிக்கிக்கொண்டுள்ளதென்றும், எஞ்சியுள்ள சியாங் படையினர் கைது செய்யப்பட்டுவிட்டனர் என்றும் தெரியவருகிறது.

★

ஐசன்ஹோவர் ஆலோசனை

செஞ்சீன, சிக்கியாங்ஷான் தீவு மீது தாக்குதல் நடத்தி கைப்பற்றிக்கொண்டுள்ளது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் வாஷிங்டனில், காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்து பேசியிருக்கிறார்.

சர்க்கரை ஆலையில் வேலை நிறுத்தம்

18000 தொழிலாளர் கலந்து கொள்வர்

ஐதராபாத், ஜன. 18—

நைசாம் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த 18,000 தொழிலாளர்கள் பிப்ரவரி 5-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று தெரிகிறது.

இந்த சர்க்கரை ஆலை இந்தியாவில் உள்ள மிகப் பெரிய ஆலைகளில் ஒன்றாகும்.

இந்த தொழிற்சாலையின் தொழிற்சங்கம், பி. சோ. கட்சியினரின் ஆதிக்கத்தில் இருக்கிறதாம். வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டுவிட்டதாம்.

தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும், தொழிற்சாலை டைரக்டருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை ஒட்டி வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டதாம்.

1953—54-ம் ஆண்டு பற்றிய போனஸ், தோட்டத் தொழிலாளரின் கூலி, தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி, கூலி உயர்வு, பருவகால உடைகள் இவைகள் பற்றி தொழிலாளர்கள் போராடுகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

நெய்வேலி நிலக்கரி

பூர்வாங்க சோதனை முடிவு

சிதம்பரம், ஜன. 18—

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் பற்றிய பூர்வாங்க சோதனைகள் நடைபெற்றுவிட்டனவென்றும், இன்னும் சில பெரிய அளவு சோதனைகள் மட்டுமே பாக்கியுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரிச் சுரங்கத்தினுள் வழியும் தண்ணீரின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சோதனைகள் இன்னும் நடத்தப்படவேண்டியுள்ளனவென்று டாக்டர் பி. ஆர். எரிக் தெரிவித்துள்ளார்.

டாக்டர் எரிக், சென்னை மாநில, டெல்லி மத்திய ஆட்சிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க சுரங்கக் கழகத்தைச் சேர்ந்த இந்தத் தொழில் நுட்ப ஆலோசகர், 'லிக்னைட்' என்ற இந்த பழுப்பு நிலக்கரியின் பல உபயோகங்கள் குறித்தும், இந்த நிலக்கரிச் சுரங்கத்தை ஒட்டி பல உபதொழில்கள் வளரக்கூடும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக, என்ஜினியரிங் பிரிவு மாணவர்களிடையே பேசினார்.

நிலமில்லாதோருக்கு மாதிரி 'காலனி'

திரு—கொச்சி மாநிலத்திலுள்ள 200 நிலமில்லாத குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கென மாதிரி 'காலனி' ஒன்றை திரு—கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணு ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

தேவிகுளத்திலிருந்து 37 கல் தொலைவிலுள்ள இந்த இடத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஏகர் நிலம் சாகுபடிக்கும், ரூ. 500 பெறுமானமுள்ள ஒவ்வொரு வீடும் தரப்படும். இதுதவிர, ஏகர் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் கடனும் தரப்படுமாம்!

மேலும், ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ரூ. 50 பெறுமான விவசாயக் கருவிகளும் கொடுக்கப்படுமாம்

தேவிகுளம், பீர்மேடு புல்வெளிப் பிரதேசங்களில் உள்ள 50,000 ஏகர் நிலங்களில் சுமார் 8,000 குடும்பங்களைக் குடியமர்த்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமென்றும், இக்காலனி திட்டத்திற்கு இந்திய சர்க்கார் ரூ. 218 லட்சம் கடன் கொடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

நல்ல செய்தி!

குடிதண்ணீர். சுகாதாரத்திற்கான தேசீயத் திட்டத்தின் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எஞ்சியுள்ள பாகத்தில் சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து ரூ. 60 லட்சம் கிடைக்குமென்று தெரிகிறது.

குடிதண்ணீர், சுகாதாரத் திட்டத்திற்குச் சென்னை சர்க்காரும் சமபங்கு பணம், அதாவது ரூ 60 லட்சம் செலவழிப்பர் என்றும், காலரா நோய் பரவியிருக்கின்ற குறிப்பிட்ட 5 மாவட்டங்களில் மட்டும் வருகிற மார்ச்சு திங்கள் இறுதிக்குள்ளாகவே இத்தொகை பூராவும் செலவழிக்கப்பட்டுவிடும் என்றும், இவ்விதம், காலரா தடுப்பு போன்ற சுகாதார திட்டத்திற்கு மட்டும் ரூ. 120 லட்சம் செலவிடப்படும் என்றும் மாநில சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி கூறியிருக்கிறார்.

புதுவையில் கல்வி முறை

புதுவை மாநிலத்தில், தற்போது, புதுவைக்கருகிலுள்ள சென்னை மாநிலத்தில் அனுசரிக்கப்பட்டு வருகின்றதைப்போன்றே கல்வி நிறுவனங்களில் பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. இது, பிரெஞ்சிந்திய ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து புதுவை ராஜ்யம் விடுவிக்கப்பட்ட பின், நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டிய அவசியமானதொன்றாகிவிட்டது.

சென்னை மாநில பிற்பட்ட வகுப்பினர் மாநாடு

21-1-55 காலை 9 மணிக்கு, சென்னை, மவுண்ட் ரோடு, ராஜாஜி மண்டபத்தில். சென்னை மாநில பிற்பட்ட வகுப்பினர் மாநாடு தோழர் எஸ். சுவயம் பிரகாசம் தலைமையில் நடைபெறும். ராஜா ஸ்ரீ ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி (சென்னை மாநில மராமத்து மந்திரி) கொடியேற்றி வைப்பார். டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் (மத்திய சர்க்கார் விவசாய மந்திரி) மாநாட்டை திறந்து வைப்பார். முதன் மந்திரி காமராச நாடார், எம். ஏ. மாணிக்கவேலு நாயகர், எஸ். எஸ். ராமசாமி படையாச்சி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கே. நஞ்சுண்டையா வரவேற்புத் தலைவராகவும், எச். பி. ஹரி கௌடர், எம்.எல்.ஏ., காரியக் கமிட்டித் தலைவராகவும், விட்டல் வி. சௌனி பொக்கிஷதாரராகவும் உள்ளனர். எஸ். தெய்வசிகாமணி நாயகர், எம்.எல்.ஏ., ஏ. சுப்பிரமணியம், எம்.எல்.சி., கே. சிவ ஞானண்டித் தேவர், எம். ஆர். ராமச்சந்திரன், எம் எல்.ஏ., சி. நடராஜ முதலியார், என். ஜீவரத்தினம் ஆகியோர் கூட்டுக் காரியதரிசிகளாக உள்ளனர்.

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

ஜன. 20: மாயவரம்
21: பொறையார்
22: போளூர்
23: ஆம்பூர்
24: குந்தை (குன்னூர் அருகில்)

நீண்ட ஆயுள் பெற...

திருவனந்தபுரம் கொல்லம் மாவட்டத்தில் உள்ள முக்றைத்தம் எனும் இடத்தைச் சேர்ந்த மோசஸ் என்பவர், 117 வயதாகியும் எல்லோரையும் போல உறுதியான தேகக்கட்டுடன் இருக்கிறார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

மூஸா என்று அழைக்கப்படும் அவருக்கு குழந்தைகளைப் போலவே, இந்த வயதான காலத்தில் புதிய பற்கள் முளைத்துள்ளனவாம்; ஆனாலும், காய்ச்சல் என்று படுப்பதே கிடையாதாம்.

சாதாரணமாக ஒரு இளைஞன் எத்தனை வேகமாக நடக்க முடியுமோ அவ்வளவு வேகமாக அந்த முதுகிழவராலும் நடக்க முடிகிறதாம்.

ஒவ்வொரு மாதமும், தான் பெற்றுக்கொள்ளும் ஒருவகை எண்ணெய் சிகிச்சையினால்தான் தன்னால் அவ்வளவு ஆரோக்கியமாகவும், நீண்டகாலமாகவும் வாழமுடிகிறதாகவும் அவர் கூறுகிறாராம்

சம்பளம் கோரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்!

கயா நகராண்மைக் கழகத்தின் கீழுள்ள 75 ஆரம்பப் பள்ளிகளைச் சேர்ந்த 350 ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நகராண்மைக் கழகத்தினரின் நிர்வாக முறையைக் கண்டித்தும், நவம்பர், டிசம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்கான சம்பளங்களை உடனடியாகக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டும் 60 ஆசிரியைகள் உட்பட மேற்கண்ட 350 ஆசிரியர்களும் நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்றிருக்கின்றனர்.

இந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக அங்குள்ள எல்லா பாடசாலைகளும் மூடப்பட்டுக் கிடக்கின்றன என்றும், சுமார் 5,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டுவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

திரு—கொச்சி தலைவர்கள் மீதுள்ள வழக்குகள்

பெங்களூருக்கு மாற்றப்படும்

புதுடில்லி, ஜன. 17—

திரு—தமிழக தலைவர்களான குஞ்சன் நாடார், எஸ். டி. மோசஸ், நல்லதம்பி நாடார் போன்றவர்கள் மீது திரு—கொச்சி போலீசார் தொடர்ந்திருக்கும் வழக்கை, திரு-கொச்சி அல்லாத மற்றெந்த மாநிலத்திலுள்ள நீதிமன்றம் ஒன்றுக்கு மாற்றுமாறு இந்திய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, வழக்கை வேறு மாநிலத்தில் உள்ள நீதிமன்றம் ஒன்றுக்கு மாற்ற உத்தரவு பிறப்பிச்குமென்று தெரிகிறது.

இப்போது நான்கு வழக்குகள் தக்கலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெறுவதாக இருக்கின்றன.

திரு—கொச்சி சர்க்காருக்காக அட்வகேட்-ஜெனரலும், மனுதாரர்களுக்காக டி. சுப்பிரமணிய அய்யரும் ஆஜரானார்கள்.

மனுவை விசாரணை செய்த தலைமை நீதிபதி, இப்போது திரு—கொச்சியில் நிலவும் சூழ்நிலையில், தங்கள் வழக்கு நியாயமான முறையில் தீர்க்கப்படாது என்று மனுதாரர்கள் நம்புவதுபுரிந்து கொள்ளக் கூடியதே என்று கூறி, இருதரப்பு வழக்கறிஞர்களையும், வேறு எந்த மாநிலத்திற்கு வழக்கை மாற்றலாம் என யோசனை கேட்டார்.

மனுதாரர்கள் சார்பில், 'திருநெல்வேலி நகருக்கு மாற்றலாம்' என்று கூறப்பட்டது. 'திருநெல்வேலியிலும் சூழ்நிலை சரியில்லை' என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது.

இறுதியில் மைசூர் மாநிலத்தில்—பெங்களூரில் உள்ள நீதிமன்றம் ஒன்றுக்கு வழக்கை மாற்றலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இதுபற்றிய உத்தரவை உயர் நீதிமன்றம் நாளை பிறப்பிக்குமென்று தெரிகிறது.

தியாகம் செய்ய முன்வருவர்?

சென்னை, ஜன. 18—

சென்னை ரோட்டரி கிளப்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட மத்திய மந்திரி டி. டி. கே. பேசுகையில், பாமர மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் தொழில் அதிபர்கள் சர்க்காருடன் ஒத்துழைத்து ஓரளவு தியாகமாவது செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இப்போதுள்ள சமுதாய அமைப்பை மாற்றிவிட வேண்டுமென்பதில் இந்திய சர்க்காருக்கு சந்தேகமே கிடையாதென்றும், ஐந்தாண்டுத் திட்டமும் அந்த அடிப்படையிலேயேதான் தீட்டப்பட்டிருக்கிறதென்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

சட்டசபை தஞ்சம் அளிக்கிறது

நேபாள ஆலோசனை சட்டசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, போலீசார், சட்டசபைக்குள் நுழைந்து ரத்னபாத கரேல் என்பவர் மீதுள்ள கிரிமினல் குற்றச் சாட்டுக்காக அவரைக் கைது செய்ய வந்தனர். இதை உறுப்பினர்கள் யாவரும் ஆட்சேபிக்கவே, கரேல், அன்று இரவு சட்டசபைக்குள்ளேயே தூங்குவதற்கு சட்டசபை சபாநாயகர் 'அபயம்' அளித்திருக்கிறார். கரேல் மீதுள்ள 'வாரண்டை மறுநாள் தம்முன் சமர்ப்பிக்கும்' படியும் உத்தரவிட்டிருக்கிறார்.

சபாநாயகரின் இந்த அபயத்தால், கரேல், அன்றிரவு முழுமையும் சபைக்கு வெளியே போலீசார் காவல் புரிய, உள்ளே தூங்கியிருக்கிறார்!

ரூ. 50,000 இன்சூர் செய்யப்பட்ட கவர்!

உள்ளே வெறும் காகிதம் மட்டும் இருந்ததாம்!

அகமதாபாத், ஜன. 18—

இங்குள்ள பிகானீர் பாங்கிக்கு ரூ. 50,000-க்கு இன்சூர் செய்யப்பட்ட கவர் ஒன்று கிடைத்ததாம். அதைப் பிரித்துப் பார்த்ததில் அதன் உள்ளே வெறும் காகிதமும், அட்டைகளும் இருந்ததாம்.

பிகானீரில் உள்ள இந்த பாங்கியின் கிளையிலிருந்து இந்த கவர் அனுப்பப்பட்டதாம்.

இச்செய்தி போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது.

போலீசார் இ. பி. கோ. 380 பிரிவின்படி வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

கண்விழிப்பா?

கராச்சி, ஜன 18—

கிழக்கு பாகிஸ்தானில் மீண்டும் சட்டசபை அமைத்து பார்லிமெண்டரி ஆட்சி முறையை (மக்கள் நேரடி ஆட்சி) ஏற்படுத்துவது சம்பந்தமாக, பாகிஸ்தான் பிரதமர் முகமதலி, வெகு விரைவிலேயே அறிக்கை ஒன்றினை வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கராச்சியில் இருந்துவரும் முன்னாள் கிழக்கு பாகிஸ்தான் பிரதமர் பஸ்லுல் ஹக், பாச். முதல் மந்திரியை அடிக்கடி இது விஷயமாகச் சந்தித்துப் பேசியிருக்கிறாராம்.

பஸ்லுல் ஹக்கையே மீண்டும் மந்திரிசபை அமைக்கும்படி முகமதலி கேட்டுக்கொள்ளலாமென்றும், அது முடியாவிட்டால், பஸ்லுல் ஹக்கின் பிரதிநிதி ஒருவராவது, சர்க்காரை அமைக்கக் கோரப்படலாமென்றும் நம்பப்படுகிறதாம்.

அரசாங்கம் அமைக்க தயார்

திரு—கொச்சி கம்யூனிஸ்டு தலைவர் அறிவிப்பு

திருச்சூர், ஜன 18—

"திரு — கொச்சியில் இப்போதுள்ள ம. சோ. கட்சி அரசாங்கம் வீழ்ந்தால், காங்கிரஸ் கட்சி கூட ஒரு நிலையான மந்திரி சபையமைக்க முடியாது என்பதை கடந்த கால அனுபவம் காட்டுகிறது; ஆனால், கம்யூனிஸ்டு கட்சி, இதர இடதுசாரி கட்சிகளடங்கிய ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து ஒரு அரசாங்கம் அமைக்கத் தயாராக இருக்கிறது,"

என்று, திரு—கொச்சி மாநில கம்யூனிஸ்டு கட்சிப் பொதுச் செயலாளரான தோழர் சி. அச்சுதமேனன், தோழர் வாரியர் தலைமையில் இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்

புதுவை அபிவிருத்தி

புதுவை மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்காக நடைமுறை நிதி ஆண்டில் மிகுதியான இரண்டு மாதங்களில், இந்திய சர்க்காரால் ரூ. 10 லட்சம் செலவு செய்யப்படும் என்று நம்பப்படுகிறது.

விவசாய அபிவிருத்தி, புதிய சாலைகள் அமைத்தல், மாநில கைத்தறி நெசவாளருக்கென புது கூட்டுறவுச் சங்கங்கள் திறப்பது ஆகியவற்றிற்கான திட்டங்கள் யாவும் வகுக்கப்பட்டு இறுதிக் கட்டத்தை எய்தியுள்ளனவாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,